262

262

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1934

TASOPHONE
REGISTERED TRADE MARK

TASOPHONE RECORDS

Second

TAS·OPHONE Co
REFINED MUSIC HOUSE
WN HALL ROAD
MADURA

4.

October
1934.

MADURA 1934

NR21
N34
182118

The Rarely staged Drama set

'MATHURAI VEERAN'

5 Records Rs. 13-12-0.

Will be Released on

20th October.

Udumalai, Narayana Kavi,



Asiriyar.

TAS-O-PHONE Records are all New songs of up-to-date tunes & subjects composed by the direct disciple of the famous Udumalai, Muthuswami Kavirayar, the great Narayana Kavi, best known of living Tamil songs composers and Drama tutors of the day.

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Kogilagana Miss. T. S. Kamalam.

கோகிலகான மிஸ் T. S. கமலம்.

2007

Tamil.	Vocal	Female

784.0954

T.S. 9	Vanthirukkuthu Unakku	Valli.
	Kalyanam Seithukko	,,
	வந்திருக்குது உனக்கு	வள்ளி
	கல்யாணம் செய்துக்கோ	,,

வள்ளியிடம் நாரதர் வள்ளியின் கல்யாண வைபவத்தைப் பற்றியும், முருகனின் பெருமையையும், வள்ளி முருகனையே மணந்துகொள்ள வேண்டியதைப்பற்றியும், வெகு விரிவாகப் பாடப்பட்டிருக்கிறது.

Insist on buying Tas-O-Phone Mechines.

பாட்டு.

வந்திருக்குது உனக்கு யோக
மாலைப்பொருத்தந்தனக்கு தனக்கு
எனக்குத் தெரியும் (வந்தி)

அந்த குமரனின் கைத்தாலி கட்டிக்
கொண்டால் நீ பாக்யசாலி (குமர)

(நாரதர் வசனம்) வள்ளி உன் கலியாணத்திற்கு

பாட்டு:—பாரிஜாத மலர் பந்தல் கீழே பத்மமலர்
பன்னீர் சிந்தல் சிந்தல் (பாரிஜாத)

(வ-ம்) வள்ளி உன் கலியாணத்துக்கு மேளம் எது தெரியுமா?

பாட்டு:—தேவதுந்துபிநாதம் உன்
திருமணத்திலெப்போதும் கீதம் (தேவ)

(வ-ம்) வள்ளி உன் கலியாணத்திற்கு வந்து உன்னையும் மாப்பிள்ளை யாகிய சுப்பிரமணியனையும் கௌரவித்து ஆசீர்வதிக்க வருப வர்கள் யார் தெரியுமா?

பாட்டு:—முப்பத்து முக்கோடி தேவர்
அரன் முதலயன்றி மூவர் மூவர் (முப்)

(வ-ம்) வள்ளி இவர்கள் மட்டுமா? இன்னும்

பாட்டு:—நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்
பரத நடன கந்தர்வ ஸ்திரீகள் ஸரஸிகள் (நாற்)

(வ-ம்) இதுவும் தவிர உன்னோடு இவ்வளவு நேரமாய் இங்குநின்று பேசிக்கொண்டிருக்கிறனே!

பாட்டு:—இந்தத் தும்புரு நாரதன் பாடல் தேவசுந்தர
மாதர்கள் ஆடல் ஆடல் (தும்பு)

Tas-O-Phone Records, hear them, Lough and enjoy.

(வ-ம்) இதெல்லாம் இருக்கட்டும் இன்னொரு விசேஷம்! உன்மாப் பிள்ளையாகிய சுப்பிரமணியக் கடவுளுக்கு மைத்துனனான அந்த மன்மதனிருக்கின்றானே அவன் மனைவி ஆறைந்து இரண்டு லக்ஷணம் பொருந்திய உனக்கு முறைமையில்

பாட்டு:—நாத்தி ரதி உந்தன் தோழி—யாக
நடித்துசெய்வாள் கேலி ஜோலி (நாத்தி)

(வ-ம்) வள்ளி இதைவிட இன்னும் ஒரு பெரிய மகத்துவ மிகுந்த விஷயமிருக்கிறது அது என்ன தெரியுமா? உன் தாய் தந்தையர்கள் என்னுடைய பெண்ணை உங்கள் குமாரனுக்கு தத்தம் செய்துவிட்டோமென்று நீர் வார்ப்பவர்களல்லவா அப்போது அதை ஆமோதிக்கிறவர்கள் யார் தெரியுமா? அந்த

பாட்டு:—உமையும் சிவனும் நின்று தாரை
உனக்கு வாங்குவார் நன்று நன்று (உமை)

(வ-ம்) வள்ளி உனக்கு ஆடை ஆபரணங்கள் தான் சொல்லவேண்டியதில்லையே இருந்தாலும் இயற்கையிற் கட்டும் சேலையைப் பற்றி மட்டும் சொல்லுகிறேன்—உனக்கு

பாட்டு:—பச்சைப் பீதாம்பரப் பட்டு கட்டி
பவனியே புறப்பட்டுச் சுற்றி (பச்)

(வ-ம்) வள்ளி இவ்வளவெல்லாம் சொன்னேன். இன்னும் அடடா உனக்கு என்னதான் யோகம் வந்துவிட்டது. ஊர்கோலம் எதின்மேல் தெரியுமா?

பாட்டு:—மயில்வாகனத்திலூர்கோலம்—சுப்பிர
மணியருடன் வரும் சீலம் சீலம் (மயில்)

(வ-ம்) வள்ளி ஆமாம் இதெல்லாம் சொல்லியாகிவிட்டது. கல்யாணம் எங்கே தெரியுமா அதையும் சொல்லி விடுகிறேன்.

Use Tas-O-Phone Wipers before playing your Records.

பாட்டு:—அந்த கழுகுமலையில் கலியாணம்—நடக்கும்
கட்டாயம் பிரமாணம் தோணும் (அந்த)

(வ-ம்) வள்ளி! இந்த கல்யாணத்தின் வைபவத்தைப்பற்றி என் ஒரு நாவால் சொல்லமுடியாது—அதை

பாட்டு:—செப்பத்தரமல்ல மானே--கண்டு
சேவை செய்யவேணும் நானே நானே (செப்)

(வ-ம்) வள்ளி! ஆனல் நீர் ப்ரம்மபுத்திரர். அதாவது ஸரஸ்வதியின் மகனுயிருந்தும் கலியாண வைபவத்தைப்பற்றி விரிவாய்ச் சொல்லுகிறீர் என்று நீ நினைக்கலாம். அது அப்படியல்ல யார், யார் எதைச் செய்யவேண்டுமோ அவர்கள் தான் அதைச் செய்யவேண்டும். அதற்கு தகுந்தகாலம் சமீபத்தில் வந்துவிட்டதால் தடையின்றி முருகனை

பாட்டு.

கல்யாணம் செய்துக்கோ கல்யாணம் செய்துக்கோ
கட்டாயம் கல்யாணம் செய்துக்கோ
கந்தனுக்கும் உந்தனுக்கும் பொருத்தந்தான்—அவனைக்
கல்யாணம் செய்யாவிட்டால் வருத்தந்தான்
அவன்—சங்கீத சாஸ்திரத்தில் சிறந்தாண்டி
அவன்—சரவணப் பொய்கையில் பிறந்தாண்டி அவனைக் (கல்)
அவன்—பிரமனைச் சிறையிலடைத்தாண்டி
அவன்—பெருத்த அசுரர்களைத் தொலைத்தாண்டி அவனைக் (கல்)
அவன்—சிஷ்டர்களுக்கு வரம் தருவாண்டி
தமிழ்ச் சிந்து மகிழ முந்தி வருவாண்டி அவனைக் (கல்)
வேலனென்பவன் பெண்ணே யுனக்கு லோலன் தான்—அன்பு
வேண்டாதவர்க்கு அவன் காலன் தான்
முருகனென்பவன் திருமாலின் மருகன் தான்
முத்தமிட்டணைய நல்ல அருகன் தான் அவனைக் (கல்)

Ask your Tas-O-Phone dealer to demonstrate you T. S. No. 5.

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil. Christian Lyric. Vocal.

Mr. Bhagavathar Vedanayaga Sastriar.

மிஸ்டர் பாகவதர் வேதநாயக சாஸ்திரியார்.

T.S. 11	Swamikiyen Enthapadu	Bairavi
	Punniyavan Engalai	Nondi-chindu
	சுவாமிக்கு ஏன் இந்தபாடு	பைரவி
	புண்ணியவான் எங்களை	நொண்டிச்சிந்து

இயேசுநாதர் சிலுவையிலறையப்பட்ட கொடுமையை வெகு உருக்க
மாக நமது வேதநாயக சாஸ்திரியார் பாடியிருப்பது
கேட்கத்தக்கது.

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி

சுவாமிக்கே னிந்தபாடு சண்டாளர் செய்தயீடு

Hear T. S. 3 the first issue.

அனுபல்லவி

பூமியிற் தேவனுன புத்ரனும் யேசுராஜா (சு)

சரணங்கள்

மதிமுக மிகவாட வலியமுன் முடிசூட
விதனமே மேனிசாட வெள்ளமாய் ரத்தம் ஓட (சு)

வலியவந்தெனக்காக மரண அவஸ்தையாக
சிலுவை மாத்தில் சாக சிநேகத்தா லுயிர்போக (சு)

மெத்தநான்தேடுங் கோவே வேதநாயகன் பாவே
சித்தம்வைத் தெனைக் காவே திரியேக ஏசுதேவே. (சு)

நொண்டிச்சிந்து

புண்ணியவா னெங்களையும்—கூட்டிக்கொண்டு
போனுன் ஒரு Gentleman வீட்டிற்கு
பெண்ணரசு துரைசானி Mistress
பெத்சி எலிசபேத் என்னும் உத்தமத்தாயார்
கர்னல் சிமின்சு ராஜன்—மனைவி இக்
காசினியெல்லாம் புகழும்—ராஜ குமரி
வன்னமணித் திருப்புயத்தாள்—செங்கமல
வாசமணக்கும் வதன ரோசமலராள்
அன்னமெனும் சாயநடையாள்—தெய்வ பெண்ணி
திராணியோ சேதுவினி ராணி மங்கையோ
சன்னகையோ ருக்மணியோ—பாஞ்சாலை
கட்டழகியோ சொற்னக் கட்டித் தங்கமோ
ஜானகியோ ரதிமானே—அயோத்தி
சந்திரமதி தமிழ்சொரி சிந்தாமணியோ

Tas-O-Phone Records cater for Scientific taste.

கோகமிகு ஞானநகையோ—சுந்தரியோ
லக்ஷிமியோ அச்சுதேச உச்சிதத்திருவோ
பூலோக ராக்கினியோ—பஞ்சவர்ண
பொற்குயிலோ சொற்பையிலும் பாபணிப் பெண்ணோ
மேலோக ஊர்வசியோ—காசிவிச
லாக்ஷியோ காமாக்ஷியோ மீனாக்ஷி நங்கையோ
அல்லி அரசாணி மாதோ—திலோத்தமையோ
கெஞ்சிக் கிளியோ அவரஞ்சி மயிலோ
சந்திரன் துலங்கினாப்போல்—மெத்தை வீட்டில்
சற்றே உலாவியிலேகக் கற்றோருடன்
சுந்தரமிகுந்த வடிவாள்—பேசிப்பேசி
சூட்சமாக நின்றதொரு காட்சிபோல் கண்டோம்
நன்மைபெருகுங் சோஞ்சோரா—மடித்திங்கம்
மாளுமிருக்க அவ்வேளை தனிலே
நின்றுக்கொண்டு சலாம்பண்ணினோம்—Where you come
நீ என்றார் from south way அம்மாள் என்றோம்
Gentle man Come here என்றார்—Well poet
Sitdown என்றார் ஒரு ரத்தின Chair மேல்
What you want singer என்றார்— I want man
Your favour என்றோம் தெம்போம் மென்றோம்
Goodmorning என்று சொன்னோம்—When will you
Go வென்றார் Next monday அம்மாள் என்றோம்
Famous poet you வென்றார்—may God
bless you வென்றோம் விரவிலதே சென்றார்
சிமின்சு Mistress அம்மாள்—How I see
Sing என்றார் many many Song பாடினோம்
கின்காப்பு சட்டைக் கொடுத்தார்—பொற்சரிகை

கெண்டபோட்ட தலைப்பாயில் இரண்டு கொடுத்தார்
பொன் காப்பு மோதிரம் தந்தார்—தங்கப்பூன்
போட்டப் பிரம்பொன்று தந்தார் மேட்டிமையாக
பட்டு லேஞ்சொன்று கொடுத்தார்—வங்காள
கேஸமிகு பசுமையி சால்வையுந் தந்தார்
Mistress எலிச பெத்தம்மாள்—அன்புடனே
மேன்மைமடு திங்கம்மாளும் மோனமுடனே
புத்திரமித்திர சம்பத்தாய்—ஊழிகாலம்
புங்கமுடன் வாழ்ந்திருக்க மங்களஞ் சொல்லி
சந்தோடமாக வாழ்த்தியே—Many much
Thank you அம்மாள் என்று சொல்லி வாங்கிகொண்டு தான்
சிந்தாக் குலங்கள் கடந்தோம்.

Sangeetha Kesari

Master. S. D. SUBBIAH

T.S. 17	Sagajaguna Rama Parts 1 & 2.	Sankara- baranam.

The Crescent

Master. M. V. KRISHNAPPA

T.S. 18	Katchi Thantharul Kalyani Pennae Unathu	Kalyani Peyagada.

Hear the above records of First release.

10 Inch Dark Green Label Record Rs. 2—12--0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil. The Crescent. Vocal

Master M. V. Krishnappa, Coimbatore.

மாஸ்டர் M. V. கிருஷ்ணப்பா, கோயம்புத்தூர்.

T.S. 15	Kannukku Nalla	Bilahari
	Pakkumarakavinilae	Senjuruti
	கண்ணுக்கு நல்ல	பிலஹரீ
	பாக்குமாரக்காவினிலே	செஞ்சுருட்டி

இராகம்-பிலஹரி

(விருத்தம்)

கண்ணுக்கு நல்ல விருந்தாக வந்த உன்கட்டழகும்
பெண்ணுக்கு பெண் இச்சைகொள்ளும் வக்கணை பேச்சழகும்
மண்ணுக்குள்ளே இணையில்லாத சோபித மாமயிலே
எண்ணுக்குள் அடங்காத மையலை உண்டாக்கி இழுக்குதையோ

பாட்டு

ஆசை ஆனேனே உன்னால் மதிமோசம் போனேனே

மகுடம்

அலைநத்திய, உலவுக்கடல், நிலமத்தியில், தலமுற்றிட
ஆ எனை தனியாய்விடுக்கில், அபாயமெத்தவும், மேவிளைந்திடும்
எண்டி அன்னமே, சரணம் செய்தேன்டி சொர்ணமே
தினமாவது, எனை நீவிட, மனமோடு உன் கனிவாய் கொடு. (ஆசை)

இராகம் செஞ்சுருட்டி.

பாக்குமரக் காவினிலே
பத்திரகாளி கோவிலிலே
ஏக்கமுடன் ஆந்தைரெண்டு எட்டி எட்டிபார்க்குதை [யோ
ஏமாந்த பேர்க்கெல்லாமிதுசாக்ஷி
காமாந்தகாரத்தால் இக்கெதியாச்சு

குண்டாற்று ஓடைக்குள்ளே கொழுப்பான காளைரெண்டு
வண்டிக்காரனில்லாமலே வச்சபாரம் இழுக்குதில்லை

வகைமோசம் வந்ததினால் வந்ததொல்லை
வையகத்தில் வேறிவர்க்கு கெதியுமில்லை

சாக்குசொல்லி போனதொரு சட்டாம்பிள்ளை அதிர்ஷ்டத்திலே
தூக்குதூக்கி பேருக்கல்லோ துள்ளுசீட்டு விழுந்ததையோ

தொல்லுலகில் தெய்வச்செயல் நல்லகாலம்
வந்ததிப்பதிப்படியே.

---

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil. Vocal. தமிழ்.

Gokilagana Miss. T. S. Kamalam.

கோகிலகான மிஸ். T. S. கமலம்.

T.S. 19	Mattuvandy Railuvandy	Comic
	My name is Daffer	,,
	மாட்டு வண்டி ரயிலு வண்டி	காமிக்
	மை நேம் ஸ் டாபர்	,,

மாட்டுவண்டி ரயிலுவண்டி வகை வகையாய் குதிரைவண்டி
கூட்டுவண்டி யேறிக்கொண்டு கூடிப்போவோம் திருநாள்பார்க்க
ஏலம்மா என் கிளியே உன்னைத்தான்

வெள்ளி விழுகுமுன்னே அந்த விடியற்காலமாகுமுன்னே
கள்ளர் விரட்டுமுன்னே கடும்பயணம் போவமிப்போ
ஏலம்மா என் கிளியே உன்னைத்தான்

ஆசைக்குகந்த மச்சான் அன்பெனக்கு தந்தமச்சான்
காசுகொடுத்த மச்சான் கைவிடாதே நிச்சயமாய்

சின்னமாடோட்டிக்கொண்டு முன்னேபோற—சின்னபைய்யா
சின்னமாடோட்டிக்கொண்டு
மாட்டேமடக்கையிலே மருவிசுகம் தர நீ வாடா (சின்ன)

ஆற்றிலழகர் வரும் அருமையான வேடிக்கையை
பார்த்துவருவோம் மச்சான் பாங்குடனே கூடவாரும் (சின்)

விருத்தம்.

காசுதரும் மாப்பிள்ளையை கைபிடித்து உள்ளழைத்து கனிவாய்பேசி
ஆசைதரும் வேசியரை அவர்பக்கம் நிறுத்திவைத்து அத்தானென்று
பேசுதற்கு சொல்லிவைத்து பித்தமது தலைக்கேற்றி பிரியங்காட்டும்
தாசிகளின் பாதமதை தவருது கும்பிடுவேன் டாபர்நானே.

பாட்டு.

(My name is daffer)
மை நே மிஸ் டாபர் எனக்கு
Daily வரும் offer
டெய்லி வரும் ஆபர் நயம்
(Female cheaper)
பீமேல் சீபர் நான் பெரியஷாப்புகீப்பர்
மைனர் கூட்டங்கோஷ்டி
மாருது ஜெமீன் பேட்டி
சைனுபஜார் பியூட்டி—அங்கு
தாகு வைப்போன் காட்டி (மை நேமிஸ்)

கூட்டிக்கொடுக்கும் வேலை—நல்ல
குட்டி மாரன்யாலே—அவர்
மாட்டியபின்னுலே—மஞ்சள்
காகிதம் கைமேலே (மை நேமிஸ்)

தாசிவீடு நேசம் தவரிடாது வாசம்
பெரும்மோசமே—சகவாசம்—எனக்கு
மோக்ஷமே கைலாசம் (மை நேமிஸ்)

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil	Vocal	தமிழ்

Sangeetha Booshani Miss. M. R. Janaki Bai.

சங்கீதபூஷனி மிஸ். M. R. ஜானகிபாய்.

T.S. 20	Yethu Venum Kezhady Mathavi	Kovalan
	Maruvi Sukam Kodukkava	Mohanam
	ஏதுவேணும் கேளடி மாதவி	கோவலன்
	மருவி சுகம் கொடுக்க வா	மோகனம்

பல்லவி.

ஏது வேணுங்கேளடி என் மாதவிமானே
மாதவிமானே உனக் (கேது)

அனுபல்லவி.

இதில் யேதமே யிலாம வீகுவேணடி நானே (ஏது)

Hear the sensational record T. S. 12.

(தொகையறு)

திருவனிதை வளமுடைய பாதநிலை
மதனிடையில் சின்னளாக
வருமை யணுகின தகல எளியவர்கள்
மிகவினிது பெறவும்வேண்டி
பருவமிது தவறாது பயிர்செய்து
கொண்டெடுத்தப் பருத்திப்பஞ்சை
சிறுவர் குமரிகள் கிழவி விறைவு
கொடுகர மதனில் சுழற்றும் ராட்டை

பாட்டு

நூலில் மோதிலால் தன் நாமம்
யேலவே சிறந்த—கதர்
சேலை நூறு வேணுமாடி
சாலவே யுடுக்க உனக்கு (ஏது)

வந்தேமாதர மென்றே கூவிடு
சந்தோஷக்காட்சி ஜேய்—ஜேய்—ஜேய்

சேரும்

நன்றே சாதிப்பெண்பால் மாணவர்
கொண்டாடுஞ் சீட்டி—ரவிக்கை (ஏது)
தக்கிளியால் முருக்கிய நூலில்
வக்கனைத்தாவணிக்கை
உடுமலைப்பதியார் முளக்கிடுதே
நிகர்த்திடு பாவணி படிக்கை (ஏது)

—

இராகம்—மோஹனம்.

பல்லவி.

மருவிச்சுகங் கொடுக்க வா—மனதிலன்பு
பெருகத் தினஞ்சுகிக்க வா (மரு)

அனுபல்லவி.

தருமொய்த்த முகில் வர்க்கந்
தவள் வெற்பின் நிலைபெற்ற
முருகப்பறு முருகப்ப
பழனிப்பதி கந்தப்ப (மரு)

சரணம்.

கள்ளவிருங்கடப்பங் கமழ் மணித் தோள
கானக்குறத்தி தேவயானை மணாளா
தெள்ளுதமிழ்ச் சரப சீடர் சொல்லாளா
சிறுமி யெனை மணந்த செல்வக்கண்ணாளா (மரு)
மாவுலவு குயி லிசை தருவனமதில்
மாருத நிலவி வரு நிலவதனிடை
மா தூரதிமத ன மதிருவருமென
மார்பினொடு மார்புரள மாலையிது (மரு)
காமலகிரி ம
கா கடினமிது
காலை மனமெழு
காயுருகுதுகு
காசிறிது காவிலினி காதலொடு (மரு)
தாமதஞ்செய்வ
தால் வரும்பழி
தாணிலங்குமு
தாசினம்பல
தாங்கிடவு மாம்புவியில் தாங்களெனை (மரு)

Tas-O-Phone machines are cheaper, stronger and durable.

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil. Vocal. தமிழ்.

Miss. T. S. Kamalam & K. P. Janaki.

மிஸ். T. S. கமலம் & K. P. ஜானகி.

T.S. 21	Ennadi Suppatha	Duet
	Ethanai Nalaiki Porupaen	,,
	என்னடி சுப்பாத்தா	தர்க்கம்
	எத்தனை நாளைக்குப் பொருப்பேன்	,,

சுப்பாத்தா:—(வ-ம்) அடியே அலமேலு

அலமேலு:—(வ-ம்) என்டி சுப்பாத்தா

சு:—(வ-ம்) ஒரு சங்கதி.

அ:—(வ-ம்) என்ன அது?

சு:—(வ-ம்) அதை

பாட்டு.

வெளியே சொல்ல வெட்கமாகுது எங்க
வீட்டுக்கார மனுஷன்பேச்சை (வெளி)

அ:—சும்மா சொல்லடி சுப்பத்தா

சு:—நான் சுகப்படுவது யெப்பாத்தா

அ:—(வ-ம்) ஏண்டி! உனக்கென்னடி சுகத்துக்குக் குறைச்சல்?

(பாட்டு)

ஆடிருக்கையில், மாடிருக்கையில், அடுக்குமெத்தை வீடிருக்கையில்,
காடிருக்கையில், கரையிருக்கையில், கனத்த தோப்பு தொரவிருக்
[கையில்,
பாடுபட்டுப் போடும் புருஷன் பலமாகப் பக்கமிருக்கையில்
விசனம் வந்த விதத்தைச்சொல்லடி அடியே சுப்பாத்தா
விபரமாக விளக்கிச்சொல்லடி (விசனம்)

சு:— விளக்கிச்சொல்ல வெட்கமாகுது—எங்க
வீட்டுக்கார மனுஷன் பேச்சை (விளக்கி)

அ:—யேண்டி! சோத்துக்குப் பஞ்சமா?

சு:— இல்லையே.

அ:—கட்டும் துணிக்குப் பஞ்சமா?

சு:—இல்லையே.

அ:—காதணி சம்பத்து கைக்குவளை பத்து
மோதிரம், நாகொத்து மூணுசுத்து சுத்து,
முடிக்கும் கூந்தலில் இடிக்கும் ஊசி,
முப்பது பவுனில் அட்டிகை காசி,
மாலைக்கென்னடி மதிப்புக்கென்னடி?
காலக்கொடுமை பேசுறுயே கருத்திலுள்ளதை விரித்துச்சொல்லடி

சு:—விரித்துச் சொல்ல வெட்கமாகுது—எங்க
வீட்டுக்கார மனுஷன் பேச்சை (விரி)

Tas-O-Phone Records cater for Scientific taste.

அ:—செப்புக்குடங்களும் சிப்பிலித்தட்டுகள்
சில்லரைச் சாமான்களும் இருக்குதா?

சு:—இருக்குது.

அ:—கொப்பரையண்டா குழம்புச்சட்டி
வெள்ளிக்கூஜா கீஜாயிருக்குதா?

சு:—இருக்குது.

அ:—அப்புறம் என்னடி பஞ்சம்?

சு:—அதைச்சொல்ல நோகும் நெஞ்சம்.

அ:—சுருக்கமாகச் சும்மாசொல்லடி.

(பாட்டு)

சு:—சொல்லத்தாண்டி வெட்கமாகுது—என்
சொந்த புருஷன் பேச்சை வெளியில் (சொல்)

அ:—ஏண்டி சோறுக்க ஆளுண்டா?

சு:—உண்டு.

அ:—தோட்டம் போய் பார்க்க
பீட்டன் மோட்டார் வண்டி உண்டா?

சு:—உண்டு.

அ:—கேக்கர பண்டம் எல்லாம் வாங்கித்தாராஞ?

சு:—தாரா.

அ:—அப்ப எல்லாரைப் போல் தானே நீயும் இருக்கிறே?

சு:—ஆமா இருக்கிறே.

அ:—பின்னென்னடி விசனம் அதைச் சொல்லடி?

சு:—அது சொல்லாத தெப்படி சொல்லுவே.

அ:—சொல்லாத தென்னடி சொல்லடி.

சு:—அதைத்தாண்டி

(பாட்டு)

சொல்ல வெட்சமாயிருச்குது—என்
சொந்தபுருஷன் பேச்சை எடுத்து (சொல்ல)

அ:-தூ, இவ்வளவு தானு! என்னமோ சொல்லப் போரேண்ணல்ல இருந்தே, என்னடியம்மா நீலி எருமையே முழுங்குது கோழிண்ண மாதிரி பேச வந்துட்டா, இதுதானு பிரமாதம் எங்கவீட்டு சங்கதியை கேட்டியனு நீ இப்பவே இந்த உசுரே வுட்டுருவே, என்னமோ நானிங்கப்போய் பொருத்துகிட்டே இருக்கிறே, அப்படியே பொருத்துக் கிட்டிருந்தாலும் எத்தனே நாளேக்கிடி நா பொருத்து கிட்டிருப்பே, வயித்தெரிச்சல் வெளியே கேட்டியினு, வெட்கக்கேடு நா சொல்ரதை நீ கொஞ்சநேரம் கேட்டுப் பாரு அப்புறம் தெரியும்.

எத்தனே நாளேக்குப் பொருப்பேன்—நான்
இவனுக்குப்போட்டு தாலியறுப்பேன் (எத்)

வசனம்:—அடியே சுப்பாத்தா என் புருஷன் பொல்லாத மனுஷன் போக்கிரிப் பயல், குடிகாரன், போன மூணும் வருஷம் குடிக்க காசில்லேண்ணு:—

(பாட்டு)

பத்துபவுன்நகை முத்தண்ண செட்டியார்
பண்ணிப் போட்டதையுங் கொடுத்தேன்—வேலூர்
பால சுப்ரமண்ய சிலருமேதந்த
பதக்கந்தன்னேயுங் கொடுத்தேன்—முன்பு
செத்துப்போன சிவதீக்ஷதர் போட்டிட்ட
செம்பொற் சறப்பளி கொடுத்தேன்

சீமைக் கமலத்தோடு நாமக்கல் மிட்டாதார்
செவிக்கிட்டதையுங் கொடுத்தேன்—துஷ்டன்
இத்தனை சொத்தையும் வித்துக்குடித்து விட்
டின்னும்—போதாதென் றிங்கென்னை யதட்டுரான் (எத்)

வசனம்:—அம்மட்டோட விட்டானா போன மாசத்து சேதி தெரியாதே உனக்கு, சீட்டாட காசில்லேண்ணு என்னைப் போட்டு மிதிமிதின்னு மிதிச்சி ஒதை ஒதைண்ணு ஒதைச்சு அந்த ஒதைக்குப் பயந்துகிட்டு

(பாட்டு)

குப்பஞ்செட்டி மகன் சுப்பைய்யா பிள்ளையும்
கொடுத்த கொப்பரையண்டா—பேரூர்

ஆரியகான சபா
டிராமாக் கம்பெனியாரால்
அபூர்வமாய் நடித்துவந்த
மதுரை வீரன்
டிராமா செட்
5 ரிக்கார்டில்
அக்டோபர் மாதம் 20-தேதி வெளி வருகிறது.

Buy T. S. 14 before it is out of stock.

அப்பண்ணையர் பேரன் ஆண்டியப்பத் தேவர்
அளித்த பித்தளைக்குண்டா—அந்த
திப்பு சுல்தானது திண்டுக்கல் கோட்டையில்
திருடிவந்ததுங்கொண்டா—யென்று
செப்பியறைந்துமென் செல்வத்தை தீர்த்ததின்னம்
செலவுக்கேதாவதுண்டா—வென்று
குப்புரத்தள்ளி குயவன் களிமண்ணை
சப்புதல் போலாக தானே மிதிப்பதை (எத்தனை)

வசனம்:—இதெல்லாங்கூட பொருத்தேண்டி என்ன அந்த மாயாவுதாரன் கிருபையாலே கருகப்பிலைக் கொத்து மாதிரி ஒரு புள்ளே கொடுத்திருக்கிறுன். அதுக்கு நான் அங்கே இங்கே சம்பாதித்து பிய் பித்தாளை மணி செய்து போட்டிருந்தேன். அது பொருக்கல்லேடி, அந்த சண்டாளப்பாவிக்கு:—

(பாட்டு)

கள்ளுக்கடைக்காக பிள்ளைக்கணிந்திட்ட
வெள்ளிக்கொடி காலு தண்டை—தனை
கள்ளத்தனமாக மெள்ளக் கழற்றையில்—கண்டு
கேட்டதற்கு சண்டை—யிட்டு
கொள்ளிக்கட்டைகொண்டு கோபித்துச்
சுட்டதில் குலைந்து போச்சுதென் கொண்டை—பின்னும்
தள்ளிக் கழுதைபோல் தாக்கியுதைத்ததால்
தகர்ந்து போச்சுதென் மண்டை—இந்த
பள்ளப்பயலுக்கோ எள்ளத்தனை என்மேல்
பக்ஷமில்லை யேதும் மிச்சமில்லை வீட்டில் (எத்தனை)

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ.2—12—0.

Tamil. Vocal. தமிழ்.

Gokiladhoni. Miss. T. S. Ramamani.

கோகிலதொனி, மிஸ். T. S. ரமாமணி.

T.S. 22	Machan Vanthan	Comic
	Pakshamirukavenum Manna	Kovalan.
	மச்சான் வந்தான்	காமிக்
	பக்ஷமிருக்கவேணும் மன்ன	கோவலன்

பாட்டு.

மச்சான் வந்தான் திரும்பி வீட்டுக்கு ஆசையுள்ள (மச்சான்)
பக்ஷமொடு ராத்திரி சாப்பாட்டுக்கு அழகுள்ள (மச்சான்)
ஊம் ஆசை அன்புள்ள (மச்சான்)

Coming Shortly:- The rarely staged Drama "MATHURAI VEERAN"

வசனம்.

மனுஷன் பாருங்கோ சிகப்பிலென்ன
யானையின் சிகப்புதான்
காதென்ன யானைக்காதுதான்
பணத்திலென்ன குறைவா குபேரன்கூட
தோத்துப்போய் விடுவான்.

பாட்டு.

அச்சிலே ஊத்தி வார்த்ததுபோல அமைந்த கருடன்மூக்கு
அழகான கையை அலங்கரிக்குது ஆறு விரல்கள்ஜோக்கு
மச்சநாக்குக்கார மனுஷன் புத்திக்கு ஜன்னிசீக்கு—ஆனல்
மற்றபடிக்கெல்லாம் ஒற்றுமையான பொருத்தமிருக்குது
டீக்கு போக்கு (மச்சான்)

வசனம்.

படிப்பிலென்ன குறைவா, மிட்டாதாரென்ன, மிராசுதாரென்ன, தண்டல்காரரென்ன, தலையாரியென்ன, இதுமாத்திரமா சாயந்திரம் ஆனவுடன் காரைப்போட்டுக்கிட்டு, ஓட்டிக்கிட்டும், ஊதிக்கிட்டும், புர், புர்ரென்றும், பூத், பூத்தென்றும் ஓட்டிக்கிட்டு திரியராறு.

பாட்டு.

எட்டு, டெப்டி, முனிசீப், கலெக்டர், இன்ஸ்பெக்டரின் பெண்ணு
எத்தனையோ வலுவுக்கு வந்ததெனில் எதையும் வேண்டாமெண்ணு
பாட்டன் காலந்தொட்டு பாந்தம்விடாசொந்தப்
பாவை எனை மணம் பண்ணு—மென்று
பத்து மாசகாலம் பட்டினி கிடந்து பாரிலெனைக்கொண்ட
வீரன் சாமிக்கண்ணு (மச்சான்)

பக்ஷமிருக்கவேணும் மன்னனே—என
திச்சை வெருக்கவேண்டாம் சொன்னேனே
பானுபோல் முகனே பணிந்தேன் உமை நான்
நாணம் விட்டுமே கரம் பிடித்தேனே—என்
நாளும் களிப்படைய நினைத்தேனே
இக்ஷணம் உமைநான் அனுப்பிடமனந்தான்
கஷ்டமாகுது என்று வருவீரோ—என
திஷ்டம் போலயிருந்திடுவீரோ (பக்ஷ)

Try T. S. 7 first at the nearest Tas-O-Phone dealers.

10 Inch Dark Green Label Record Rs. 2-12-0 each

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil. Vocal. தமிழ்.

Kallaraja. Mrs. V. M. Meenakshi Sundarambal
& Mr. T. D. Rathinappa.

கள்ளராஜா. மிஸஸ். V. M. மீனாக்ஷிசுந்தராம்பாள்
& மிஸ்டர். T. D. ரெத்தினப்பா.

T.S. 23 { Thottal Manakuthady — Duet
Kediyana Kediappa — Kallapart
தொட்டால் மணக்குதடி — தர்க்கம்
கேடியான கேடியப்பா — கள்ளபார்ட்

182118

Hear the sensational record T. S. 12.

திருடன்:—தொட்டால் மணக்குதடி குட்டி குட்டி.
சதாரம்:— தோசி தொடாதே போடா எட்டி எட்டி.
திருடன்:—பொட்டு மினுக்குதடி.
சதாரம்:— புழுத்து மடிவாயடா.
திருடன்:—கட்டியணேயவாடி.
சதாரம்:— காலால் உதைப்பேனடா.
திருடன்:—மெட்டிக் காலாலே உதைபட்ட சுகம் போதும் போதும்.
சதாரம்:— சண்டிப்பயலே என்ன கேடு கேடு.
திருடன்:—சரிதான் ஒரு தில்லாலே நீ பாடு, பாடு.
சதாரம்:— தண்டுமுண்டாகு மோடா.
திருடன்:—மாண்டு விழுவாயடி.
சதாரம்: —மண்டைப் புழு உனக்கு
மாண்டு விட்டதோ மூடா (தொட்டால்)

(2) **விருத்தம்.**

கேடியான கேடியப்பா—சென்னே கேக்கே தங்கவேலனப்பா
தங்கவேலு சீடனப்பா—எனதுகுரு தாசன் பெரியசாமியப்பா
பெரியசாமி பேர்விளங்க—டி. வி. அண்ணுமலே முன்னேநிற்பார்
அவருடைய சீடனப்பா—நான் அறியாத பாலனப்பா
பாலப்பிராயமப்பா— பங்கமில்லா சிங்கமப்பா
அபயோரே சபையோரே—இந்தசபைதனிலே பாடிவரும்
கள்ள எம். வி. மீஞக்ஷி என்னே ஆசீர்வதிக்க வேண்டுமையா
கனவானே பூமானே சீமானே.

பாட்டு.

சென்னேயிலே நான் பிறந்து
சீரும் பெற்றேனே ராஜா பேரும் பெற்றேனே
குருவை தேடிகற்றேனே—எங்கள் செல்வ
பெரியசாமி கொடுத்த நெம்பர் வில்லேயப்பா

டொன்டிசிக்ஸ்காரனப்பா ஜெயில்சட்டை பாருங்கப்பா.
ஜெயிலுக்குள்ள போனதினால் ஜெயக்கொடி கொடுத்தார்
திருடர்களுக்கு எஜமானை விடுத்தார்—எந்தன் கையில்
கப்பரை கம்பளி கட்டல் தனி வீடைக்கொடுத்தார்
கைதனிலே பிரம்பதைக் கொடுத்தார்—வார்டர்களை
போவென்று தொலைத்தார்.
மறுநாள் காலையில் வார்டர் வந்துவிட்டு
கதவைத்திறந்தார் எல்லோரையும் கொண்டுவா
வுரைத்தார் கட்ருவை லயனாக வைத்தார்
அதில் ஊத்தியிருக்கும் கஞ்சியைக் குடித்து வேலைக்கு
போகச்சொன்னார் ஸ்டோரின் நெம்பர் குறித்துக் கொண்டார்
வித வித சாமான்களைக் கொடுத்தார்.
உடனே ஆயிரம் திருடரை நான் உதைமேலே
உதைத்து கொண்டுவந்தேன்—நடையாக
விரட்டி பகதூர்களை உருட்டி (சென்னை)

Tas-O-Phone

Double spring portable.

Non Breakable Governor Spring.

Guaranteed for 5 years.

Rs. 120.



Model No. 113.

Await the release (Three Saivates of Hebrew).

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.
10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ.2 —12—0.

Malayalam. Vocal. Female.

Srimathi. K. Barathi Ammal, Kayankulam.

ஸ்ரீமதி. K. பாரதியம்மாள், காயங்குளம்.

T.S. 24	Hasangalai	Raga-malika.
	Sugriva Mitram	,,
	ஹசாங்கலே	ராகமாலிகா
	சுக்ரீவ மித்ரம்	,,

Srimathi K. Barathi Ammal comes out of a respectable aristocrat family. Her wonderful sweet voice makes the hearers spell bound due to her masterly touches of the high pitches of the different Swarasathanams flawlessly. She has selected here two pieces from Nala Damayanthi & done splendidly. She has been awarded several Gold Medals by the various organisations of Travancore & by the Royal family. This is a record worthy to be accumulated in your record chest.

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil Vocal தமிழ்

Raja. M. G. Dhandapani Naidu.

ராஜா. எம். ஜி. தண்டபாணி நாயுடு.

T.S. 25	Baratha Kanda Sri	Navarasa Canada
	Santhekam Nam Thekam	Saveri
	பரதகண்ட ஸ்ரீ	நவரச கானடா
	சந்தேகம் நம்தேகம்	சாவேரி

இராகம் நவரச கானடா தாளம் ஆதி.

பல்லவி.

பரதகண்ட தேசிய ஞானமே
பரவவே செய்வோமினி (பரத)

Play this Record on Tas-O-Phone Machines.

அனுபல்லவி.

ஒருவளீன்ற சுதர் நாம் உணர்வில்லாமலே
திரியும் தீமைதனை திரும்பவே செய்திட (பாத)

சரணம்.

அடிமை வாழ்வினி விடுநிதானமா
ரிடு பொன்னன்புமிஞ்சு இயல்புசாலவும்
உடுமலை நாராயணன் சொல்லுமுபாய
முடிவுரை மனமே முயற்சியிங்ஙனமே (பாத)

இராகம் சாவேரி. தாளம் ஆதி.

பல்லவி.

சந்தேகம் நம்தேகம் இதை
சதமென உலகினில் நிதமக
மும் பொலிந்தல் (சந்)

மகுடம்.

சகலநிதியும் தனதினமென புகல்வதும்
சுகமினிதென அகமதில் மகிழ்வதும் (சந்)

அநுபல்லவி.

விந்துரு கொண்டுவந்த விஷமலக்கேணி
ஐந்து பூதக்காணி ஆட்சிமேவுகிற சூட்சதோணி (சந்)

சரணம்.

நீரின் குமிழியென நிலை யற்றதேகம்
நீலமரலிவரும் போது நாமேகம்

நாடு இருந்தாலும் ஏகம்—மெத்தை
வீடு இருந்தாலுமேகம்—நமக்கு
நஞ்சையிருந்தாலுமேகம்—தோப்பு
புஞ்சையிருந்தாலுமேகம்—பண
ரொக்கமிருந்தாலுமேகம்—மனையாள்
பக்கமிருந்தாலுமேகம்
தாயிருந்தாலும் ஏகம்—பெற்ற
சேயிருந்தாலும் ஏகம், ஏகம், ஏகம், ஏகம்

நீலமரலி வருும்போது நாமேகம்
பாரிலிதையறியா பாரத்தையர்மோகம்
பகல்கின வாகுமே பாரனுபோகம்

பண்டு ஊழ்வினையால் பெண்டுபிள்ளையென
விண்டுமே மனது கொண்டிடாது இனி
தண்டபாணிகவி கண்டுபாருலகில்
பார்த்திடில் மனம் தேர்த்திடில் (சங்)

சுத்த தோனியும்
அதிக
சப்தமும் உள்ளது
டாசோ - -
- - போன்
ஹாரன் மாடல்
டபிள் ஸ்பிரிங்
மேஷின் விலை ரூ. 90.

மாடல் நிர். 104.

Tas-O-Phone Machines Warranted for 5 years.



10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Telugu Vocal Male

Sangeetha Vidwan K. S. Venkataramier,
Kunnakudy.

சங்கீத வித்வான் K. S. வெங்கட்ராமய்யர்,
குன்னக்குடி.

T.S. 26	Neekae Theliyaka	Ananda Bairavi
	Nenu Jesina	Karaharapiriya
	நீகே தெலியக	ஆனந்த பைரவி
	நேனு ஜேஸின	கரஹரப்பிரியா

Tas-O-Phone machines are cheaper, stronger and durable.

இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி

பல்லவி.

நீகே தெலியகபோதே—ராம
நேநேமிஜேயுத்ஸுரா—ஸ்ரீராம (நீகே)

அனுபல்லவி

லோகாதாருடை வேயுநநாலோநி
ப்ரஞ்வலிம்சுஜாலி (நீகே)

சரணம்.

எந்தெந்து ஜுவின எந்தெந்து பலுகின
எந்தெந்து பூஜிம்சின எந்தெந்து ஸேவிம்சின
அந்தந்து நீவநி தோசுடந்து நீபாதார
விந்தமுலுத்யானிம் சினதெந்துகநித் தியாகராஜஸந்நுத (நீகே)

இராகம் கரஹரப்பிரியா தாளம் ஜம்பை

பல்லவி.

நேநு ஜேவிந பூஜாபலமு (நேநு)

அனுபல்லவி.

பானுகுல திலகநீ—பாதமுலுபஜிம்ப (நேநு)

சரணம்.

தம்பூரு ஸ்ருதி கூர்ச்சி தாளம்ருதங்கமுஜேவி
ஸ்வம்பைந மனஸுனஸ்வஸ்வாமு தோநுநா
அம்புஜ விலோசனு ஹரிகேசபுரவாஸ (நேநு)

True to life production Tas-O-Phone Records.

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil Christian Lyric Vocal.

Kaviprasangam D. A. Arthur Bagavather.

கவிப்பிரசங்கம் D. A. ஆர்தர் பாகவதர்.

T.S. 27	Kalvariyilae	Hind Tune
	Kurusinil Marika Vanthonae	Hind Thodi
	கல்வாரீயிலே	இந்துஸ்தான் டியூன்
	குருசினில் மரீக்கவந்தோனே	இந்துஸ்தான் தோடி

திருரத்தம்.

1. சல்வாரியிலே தோணும் சிலுவையிலே
 கசிந்தோடும் ஊற்றில் ஸ்நானம் பண்ணும்
 கசிந்தோடும் ஊற்றில் ஸ்நானம் பண்ணும்
 கசடறவொளி தருமென எண்ணும்

2. ஜென்ம கர்மப்பிணி தனையகற்றும்
சுகமான தீர்த்தமிது காணும்
சுகமான தீர்த்தமிது காணும்
மகத்தான இன்பமதில் தோணும்
3. தோம்தீமெனவே திரியேகனின் பால்
திருநாம கீர்த்தனங்கள் பாடும்
திருநாம கீர்த்தனங்கள் பாடும்
குருசேறினேன் பதத்தைத்தேடும்
4. பக்தியுடன் பரன் றிருவடியில்
பறை சாற்று மார்தர் கவிகண்டு
பறை பாற்று மார்தர் கவிகண்டு
புவியெங்கு மாற்றிடுவீர் தொண்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி — தாளம் ஆதி.

பல்லவி.

குருசினில் மரிக்க வந்தோனே — நாமும்
கருதிய எருசலேக்கோனே — தேனே
குன்றுமெய்த்தேவ குமாரனைக்
கொண்டாடிடுவோம் அதிதீரனை (குரு)
கோதிலா மெய்யாரண நாயகன்
மீதிலே மெஞ் ஞாபக மீறுதே (குரு)
கிறிஸ்தெனும் ஜெயவீர மனோகரன்
சிறப்புடன் கல்வாரியில் மேவிய (குரு)
கண்கவருமெழில் சுந்தரரூபனைப்
பண்மலர் கொண்டெதிர் சென்றழைப்போம் ஜெயக் (குரு)

அனுபல்லவி.

பாருளோர் புகழும் பரமதயாளன்
பரிந்துகூறி நல்வரங்களளிப்பதை
விரும்பியே துதி செய்திடு வோம் ஜெயக் (குரு)

சரணம்.

யாருக்குமி ரங்கு மனந்தகல்யாணன்
ஆருதர்கனுதினந் தெரிசனந்தரும்
வாறெனக்கருள் சுரந்தரவணைத்திடும். (குரு)

Tas-O-Phone Mach nes Warranted for 5 years.

10 Inch Dark Green Label Record Rs. 2—2—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil | Vocal | தமிழ்

Sangeedhakesari. Master S. D. Subbiah.

சங்கீத கேசரி. மாஸ்டர் S. D. சுப்பையா.

T.S. 28	Thamathamenna Maiyal thazhan Part 1 & 2	Thodi
	தாமதமேன்ன மையல் தாளேன் பாகம் 1 & 2	தோடி

இராகம் தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

தாமதமென்ன மையல் தாளேனடி நீ சும்மா
சாஹஸமொடு பேச தயவுடனெனை மருவிட இனங் (தாம)

Tas-O-Phone Records cater for Scientific taste.

அனுபல்லவி.

சா ர மீ தாம (தாம)
சாஸகு ணவுசித தருணியி தஸமயம் (தாம)
தழுவணையு மொழுகு மிலகு மலரணை தனில்
தகமையுட னிருவரினி தொடுகுலவ (தாம)

சரணம்.

பாமினிவு நயனலவித யிதழூறு
பானமது பருக வுதவி யதுமிக
பாலியிலெ யெனிலிதில் வருமொரு பழி
பாதகமு முனையணுகு முறுதினினை
பாவிமதனெடு பாண மதுடலில்
பாயுத தனினு பாதைத விர் கிருபா
பரணி சுபரு வரதிபுலவர் பகாறிய
பாமஹிமை சூடிய க பாலயதி (தாமத)
காமினியே நிலவு காய விரவுதென்றல்
கானுரை புலிபோலே—மென்மேலே
க்ஷேம மகலச்செய்யும் தீமை விலகத்தயை
சிறிதிலையோ யென்பாலேபெண்பாலே
கோமகன் கொங்கு முத்துச்சாமி சீடர் சொல்லாலே
குளிர்ந்தயிரு செவியமைந்தவனை திரு
மணங் கொளவெனடி சினந்து விழுகிறாய்
அணங்கே இது-முறையா
பிணங்குவது-சரியா
இணங்கிடவு-முடியாத மதமென்னடி
நீ சும்மா—ஸாகஸமொடு (தாமத)

Coming Shortly:- The rarely staged Drama "MATHURAI VEERAN"

10 Inch Dark Green Label Record Rs. 2—12—0 each.

10 இஞ்சு டார்க் கிரீன் லேபிள் ரிக்கார்டு ஒன்றுக்கு ரூ. 2—12—0

Tamil. Vocal. தமிழ்.

Hindustan Beauty. Miss. M. V. Sarada Devi.

ஹிந்துஸ்தான் பியூட்டி,

மிஸ். M. V. சாரதா தேவி.

T.S. 29	Madana Vullasa	Mand
	Aduthupar	National Song
	மதன உல்லாஸா	மாண்ட்
	ஆடுது பார்	தேசீய கீதம்

இராகம் மாண்ட்.

மதன உல்லாஸா மருவிட வா ஸ்ரீ
கோபாலனே ஸ்ரீகோபாலனே ஸ்ரீகோபாலனே (மதன)

Use Tas-O-Phone Wipers before playing your Records.

மதன மதுசூதன மாதவ மாயாவா
மாநாராயண ஸ்ரீதரனேவா
பதுமநாப தாமோதரனே வா
மையல் மிகவானே ஞனே ஞனேன் (கோ)
குலவிய வந்தி இலகு சிவந்தி
குடமல்லிகை முல்லைகள் பலவந்தி
மலிதரும் ப்ருந்தா வனவெழில் சந்தி
மருவிட.வா ஸ்ரீகோபாலா ஸ்ரீகோபாலனே
உயர்தரும் ஞான மொழிஉப தேச
உடுமலை மேவும் கவிவலர் பேச
ஜெயஜெயனவே வேதம்நிறை உல்லாஸ
விரிமலரணை தனிலே வருவாய் (ஸ்ரீகோபாலா)

பல்லவி.

ஆடுதுபார் சுழன்ருடுதுபார்--ராட்டை
ஆடுதுபார் கதர்கொடி ஆடுதுபார்
தக்கிளி ஆடுதுபார் சுழன்ருடுதுபார்

அனுபல்லவி.

நாடிடும் நல்ல நனிபெரும் செல்வ
தேடிடும் நம் பாரததேச தக்கிளி சுழன்ருடுதுபார்
ஏகமுமொன்றே—என உணர் தந்தே
மோகமடங்கச் சுத்த—மோன வரம்பிலே நின் (ருடுது)
அடிமையை நீக்கி அமைதி உண்டாக்கி
குடிவளரச் செய்திட கோலக் கைராட்டின மின்ருடுதுபார்
பகல்கொள்ளை யடக்க பாத்தியம் செழிக்க
ககனத்திடையில் நம்ம காந்தி கதர்க்கொடி நின்ருடுதுபார்
சீரார் கலையில் திகழ் உடுமலையின்
நாரயணன்றன்கவி ஞாயம் பொலிந்து சுழன்ருடுதுபார் (ருடுது)

Await the release (Three Saivates of Hebrew).

LIST OF FIRST RELEASE RECORDS.

Sangeetha Vidwan. K. S. Venkataramier.

T.S. 1	Enthuku Dayarathura Part 1 & 2	Thodi.

Kaviprasangam. D. A. Arthur Bagavather.

(Christian Song.)

T.S. 2	Sathiya Siluvai Kodi	Kapi.
	Kalamae Thevanai Thedu	Sahana.

Bagavathar. Vedanayaga Sastriar.

(Christian Song.)

T.S. 3	Varumaiah Pothagare	Sankarabaranam.
	Vuruhayo Ennenjamae	English Note Tune.

Natakarani. Miss. K. P. Janaki.

T.S. 4	Kaitholil Varthagam	National Song.
	Diyalangadi	Comic.
T.S. 10	Analagan Perum Parayan	Comic.
	Theendamaiye	National Song.

Kokilagana. Miss. T. S. Kamalam.

T.S. 5	Rajathi Rajan Petra	Themmangu.
	Kaiyandu Parungo	National Song.

Mr. A. G. Abdul Gani Sahib, Madras.

T.S. 6	Meelathka Jalsa	Khasidha.
	Mahaboob Subani	„
T.S. 16	Bi-Bi-Fathima Part 1 & 2	Khasidha.

Sangeetha Booshani. Miss. M. R. Janaki Bai.

T.S. 7	Malai-Kalatta Varavillai	Durbar.
	Maman Petra Pen	Senjurutti.
T.S. 12	Balya Vivakam	Vocal refrain.
	Antharangamaha	Ketharagowlam.

Kallraja. Mrs. V. M. Meenakshisundarambal.

T.S. 13	China Japan Burma Lady	Kallapart.
	Jadaiyilae Parkirathum	„

Mr. T. D. Rathinappa & Mrs. V. M. Meenakshisundarambal.

T.S. 14	Kailaya Kudagu Surilimalai	Duet.
	Chinna Chinna Vetrilai	Kallapart.

Sangeetha Kesari. Master. S. D. Subbiah.

T.S. 17	Sagajaguna Rama Part 1 & 2	Thodi.

Master. M. V. Krishnappa.

(The Crescent of Tamil Stage)

T.S. 18	Katchi Thantharul Kalyani	Kalyani.
	Pennae Unathu	Beyagada.

Hear the above records of First release.

Have you ever heard a Christian

Kalakshepam in Gramophone Records ?

Await ! **Coming Shortly !**

TAS-O-PHONE

bring you for the first time.

Insist on Buying

THE EXQUISITE QUALITY

Tas-O-Phone Machines

Warranted for 5 Years

Governor Springs Non-Breakable.

Hear the sensational record T. S. 12.



The success of the first session in recording is largely due to the genius and efficient handling of the expert Engineer Mr. Max Birckhahn of Germany whose photo is produced above that he has mastered the usual limitations in recording, Indian Music will be best seen from hearing the records.


TAS-O-PHONE டாசோபோன்
V.S. SHARMA
I have bought for you so many records for our Gramophone and why are you still angry ?
I don't want all those old records. Have you brought for me the Tas-O-Phone Records ?
TASOPHONE RECORDS
TASOPHONE
Dear Love ! Here is what you want ?
TASOPHONE
TASOPHONE
Hassa ! Hear this record
How nice it is ? Yes my Darling.
Tas-O-Phone is the best now.